**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 15.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 1 (LW2)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கேசவன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A4, A5, A6 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. A1, A3, A7 ஆஜர்)

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கீழக்காக்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலைகள் செய்து வருகிறேன். சாட்சிகள் வளர்மதி, கோபாலகிருஷ்ணன் ஆகியோரை தெரியும். இவ்வழக்கில் இறந்துபோன கருப்பையாவை எனக்குத் தெரியும். ஆஜர் மூன்று எதிரிகளையும், இன்று ஆஜர் இல்லாத நான்கு எதிரிகளையும் எனக்குத் தெரியும். ஒரு நாள் காலை சுமார் 07.00 மணிக்கு நான் போய் பார்த்த போது



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.15 13:19:06 +0530

கீழநரியன் பஸ் ஸ்டாப் அருகில் கருப்பையாவின் பிரேதம் கிடந்தது. தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை. சுமார் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு என்றால் சொல்ல தெரியாது. அவருக்கு எந்தெந்த இடத்தில் காயம் இருந்தது என்று எனக்குத் தெரியாது. எப்படி இறந்தார் என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்த போது, கடந்த 29.07.2021ம் தேதியன்று நானும் சாட்சி கோபாலகிருஷ்ணனும் வல்லந்தை பால்மேதி கிராமத்தில் உள்ள கோவிலிற்கு சென்றுவிட்டு, டார்ச்லைட் அடித்துக்கொண்டு நடந்துவரும் போது, இரவு சுமார் 09.00 மணியளவில் கீழ்நரியன்குடி பஸ் ஸ்டாப் அருகே TN 65 BZ 5035 என்ற பதிவு எண் கொண்ட Hero Splender Plus பைக்கில் கீழநரியன் பக்கம் இருந்து வந்த போது, எங்கள் ஊரை சேர்ந்த கருப்பையாவை கீழநரியன் கிராமத்தை சேர்ந்த செல்வராஜ் மகன் ரமேஷ்குமார், அவரது அண்ணன் சுரேஷ்குமார், ராமன் மகன் தமிழரசன், ராமன் மகன் ராஜ்குமார், தமிழ்செல்வன் மகன் கார்த்திகைசாமி ஆகியோர் அதே ஊரை சேர்ந்த சிலரும் வழிமறித்து, கார்த்திகைச்சாமியை அவர் கையில் வைத்திருந்த கிரிக்கெட் பேட்டால் முன்பக்கத்தில் அடித்தார் என்றும், இதனால் கருப்பையா நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டார் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அப்போது கருப்பையா 1வது எதிரி ரமேஷ்குமாரை பார்த்து மாப்பிள்ளை ஒன்னும் செஞ்சிராதீங்க, நான் உங்களுக்கு மச்சான் வேணும் என்று சொன்னதற்கு, 1வது எதிரி ரமேஷ்குமார் ஏன்டா, தேவுடியா மகனே என்னை கட்டிவைத்து அடிக்கும்போது, உனக்கு



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.15 13:19:10 +0530

தெரியல்லையா, தேவுடியா மகனே இவன கண்டந்துண்டமாக வெட்டிக்கொல்லுங்கடா என்று சொன்னவுடன், 1வது எதிரியான ரமேஷ்குமார் மற்றும் சுரேஷ்குமார் ஆகியோர்கள் கையில் வைத்திருந்த அருவாளால் கருப்பையாவின் தலையில் வெட்டினார்கள் என்றும் அதை நான் நேரடியாக பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி தமிழரசன், கத்தியால் கருப்பையாவின் தலையில் குத்தினார் என்றும், கார்த்திகைச்சாமி கிரிக்கெட் பேட்டாலும், மற்றவர்கள் கட்டை கம்பால் கருப்பையாவின் முகத்திலும், உடம்பிலும் மாறி மாறி அடித்தார்கள் என்றும், அதை நான் நேரடியாக பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்னர் எதிரிகள் அனைவரும் எங்க ஊர்க்காரங்கன்னா, தேவுடியா மகனே உனக்கு எலக்காரமா போச்சா, உன் சாவோடு முடிவுகட்டணும்டா என்று கருப்பையாவை மாறி மாறி கீழே போட்டு மிதித்தார்கள் என்றும் அதை நான் நேரடியாக பார்த்தேன் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

இதனை பார்த்த நானும் சாட்சி கோபாலகிருஷ்ணனும் அவர்கள் மீது டார்ச்லைட் அடித்தவுடன் அவர்கள் அனைவரும் சேர்ந்து கருப்பையாவை கீழநரியன் பஸ் ஸ்டாப்பிற்கு கிழக்கு பக்கமாக இழுத்து போட்டுவிட்டு வண்டியை ரோட்டிலேயே போட்டுவிட்டு ஊருக்குள் ஓடிவிட்டார்கள் என்றும், அதை நான் நேரடியாக பார்த்தேன் என போலிசார் விசாணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

பின்னர் நாங்கள் இருவரும் பயந்துகொண்டு ஊரில் யாரிடமும் சொல்லாமல் வீட்டிற்குள் சென்றுவிட்டோம் என்றும், பின்னர் இது சம்மந்தமாக 30.07.2021ம் தேதி காலை கருப்பையாவை காணவில்லை என அவர் மனைவியான வளர்மதி தேடி சென்ற போது, கருப்பையா கீழநரியன் பஸ்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.15 13:19:14 +0530

ஸ்டாப்பிற்கு பின்பிறம் கொலை செய்யப்பட்டு கிடந்ததாகவும், இது சம்மந்தமாக மேற்படி வளர்மதி மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, போலிசார் வழக்கு பதிவு செய்து, விசாரித்த போது நானும் கோபால கிருஷ்ணனும் நடந்த விவரங்களை போலிசாரிடம் சொன்னோம் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் மற்றும் இன்று ஆஜர் இல்லாத எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.15 13:19:18 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .